# தேசிய ஓய்வூதிய திட்டம்

## NPS என்றால் என்ன?

NPS என்பது சுலபமாக, எளிமையாக, சுயமாக, நம் கட்டுப்பாட்டிலுள்ள, எளிதில் மாறிக்கொள்ளக்கூடிய ஓய்வூதிய திட்டம். இது ஓய்வு காலத்திற்கான ஒரு திட்டமிட்ட சிறுசேமிப்பு. தேசிய ஓய்வூதிய திட்டம் (NPS) என்பது உழைக்கும் காலத்தில் முதலீடு செய்து ஓய்வு காலத்தில் பயன் பெறுவது. இத்திட்டம் 01.05.2009 வரை மத்திய அரசு ஊழியர்கள் மட்டுமே சேரக்கூடியதாக இருந்த திட்டம், தற்போது அனைவரும் (வெளி நாட்டு வாழ் இந்தியர்கள் உட்பட) பயன் பெறும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நமது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி PFRDA (ஓய்வூதிய நிதி கட்டுப்பாட்டு மற்றும் மேலாண்மை ஆணையம்) விண்ணப்பங்களை ஏற்கவும் சந்தா பணத்தை அவரவர் கணக்கில் செலுத்துவதற்கான அங்கீகரிக்கப்பட்ட சேவை மையம் ஆகும். PFRDA என்பது மத்திய அரசின் நிதி அமைச்சகம் மூலம் முதியோர்களுக்கு பாதுகாப்பான வருமானம் தருவதற்க்காக நிறுவப்பட்டது. மத்திய அரசு தனியார் மற்றும் அமைப்பு சாரா நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் சுயமாக சேமிக்க ஏற்ற வகையில் NPS சேவையை தர PFRDA எங்கள் வங்கிக்கு அதிகாரம் அளித்துள்ளது. நமது வங்கியின் எல்லா கிளைகளிலும் நிரந்தர ஓய்வூதிய கணக்கு எண் பெறவும், சந்தா செலுத்தவும் ஏற்ற வகையில் NPS சேவை வழங்க PFRDA –விடம் இருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது.

## NPS திட்டமும் நன்மையும்:-

- ✓ NPS என்பது PFRDA –ஆல், தெளிவான, நேர்மையான முதலீடு மற்றும் அதன் மேலாண்மை நிர்வாகத்தின் மூலம் செயல் வடிவம் பெற்றுள்ளது.
- ✓ 18 முதல் 60 வரை வயதுள்ள அனைவரும் இத்திட்டத்தில் சேரலாம்.
- ✓ இது ஒரு சுய பங்களிப்பு திட்டம் – ஒவ்வொரு இந்தியருக்கும் NPS பொதுவானது.
- ✓ **எளிதில் மாறிக்கொள்ளக்கூடியது**–அதாவது நமது முதலீட்டை நாமே முடிவு செய்யவும், சேம நல நிதி மேலாண்மை குழுவிடம் முதலீடு செய்யும் பொறுப்பை அவர்களின்பால் விட்டு விடவும் ஏதுவானது.
- ✓ **எளிமையானது** – அதாவது எந்த ஊரில் ஆரம்பித் திருந்தாலும் எந்த நகரத்திற்கோ கிராமத்திற்கோ மாற்றிக்கொள்ள ஏதுவானது.
- ✓ சுமார் 7 நிறுவனங்கள் நம்முடைய முதலீட்டை நிர்வகிப்பதால் தேவைப்பட்டால் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நாம் வருடம் ஒருமுறை எளிதாக மாற முடியும்.
- ✓ பல சேமநல நிதி நிறுவனங்கள் இருப்பதால், அவை போட்டி காரணமாக முதலீட்டாளருக்கு நல்ல சேவையும் நல்ல பலன்களையும் தரவல்லது.
- ✓ வருமான வரி விலக்கு 80-C ன் கீழ் ₹1.50,000 வரை உண்டு.
- ✓ கூடுதல் வருமான வரி விலக்கு 80-CCD ன் கீழ் ₹ 50,000 வரை உண்டு.
- ✓ இத்திட்டத்தில் சந்தாதாரர் தாம் விரும்பும் மூன்று நபர்கள் வரை வாரிசுதாரராக நியமனம் (Nomination) செய்து கொள்ள வசதி உண்டு.
- ✓ வருடத்திற்கு ஒரு முறை NSDL ல் இருந்து கணக்கு விவரங்கள் சந்தாதாரருக்கு தபால் மூலம் தெரிவிக்கப் படுகிறது.
- ✓ சந்தாதாரருக்கு கணக்கு தொடங்கியவுடன் நிரந்தர ஓய்வூதிய கணக்கு எண்ணுடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது.
- ✓ சந்தாதாரர் தமது கணக்கு நிலவரத்தை எப்பொழுது வேண்டுமானாலும் சுயமாக இணையதளத்தில் I-PIN மூலம் பார்த்துக்கொள்ளும் வசதி உண்டு.
- ✓ கணக்கு சம்பந்தமான சந்தேகங்களை இலவச தொலைபேசி மூலம் அறிந்துகொள்ள T-PIN ஐ பயன்படுத்திக் கொள்ளலாம்.

## NPS கணக்கில் பணம் எப்போது எடுக்க முடியும்?

### கணக்கு தொடங்கிய 10 வருடங்களுக்கு பிறகு :-

சந்தாதாரர் கணக்கு தொடங்கிய 10 வருடங்களுக்கு பின் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக (படிப்பு, திருமணம், வீடு வாங்க மற்றும் மருத்துவ செலவு) தனது கணக்கிலுள்ள தொகையில் அதிகபட்சம் 25% வரை எடுத்துக்கொள்ளலாம். மறுமுறை எடுப்பதற்கு குறைந்தது 5 வருடம் இடைவெளி இருக்கவேண்டும். மருத்துவ செலவிற்காக எடுக்க வேண்டிய தருணத்தில் இந்த விதி தளர்த்தப்படும். மொத்தத்தில் 3 முறை இந்த வசதி உண்டு.

### 60 வயதிற்கு முன்-குறைந்த பட்சம் 10 வருடம் பணம் செலுத்தியிருக்கவேண்டும் :-

சந்தாதாரர் கணக்கை தொடர விருப்பமில்லாத பட்சத்தில் தனது கணக்கிலுள்ள தொகையில் குறைந்தபட்சம் 80 சதவிகிதத்தை காப்பீட்டு கட்டுப்பாட்டு மற்றும் மேலாண்மை ஆணையம் கட்டுப்பாட்டிலுள்ள காப்பீட்டு நிறுவனத்தின் திட்டத்தில் முதலீடு செய்ய வேண்டும். மீதமுள்ள 20% தொகையை மொத்தமாக எடுத்துக்கொள்ளலாம். சந்தாதாரர் கணக்கை தொடர விருப்பமில்லாத பட்சத்தில் தனது கணக்கிலுள்ள மொத்த தொகை ரூபாய் ஒரு லட்சத்திற்கும் குறைவாக இருப்பின் முழுவதும் எடுத்து கணக்கை முடித்துக்கொள்ளலாம்.

### 60 வயதிலிருந்து 63 வயது வரை:-

சந்தாதாரர் 60 வயது அடைந்தவுடன் குறைந்தபட்சம் 40% தொகையை காப்பீட்டு கட்டுப்பாட்டு மற்றும் மேலாண்மை ஆணையம் கட்டுப்பாட்டிலுள்ள காப்பீட்டு நிறுவனத்தில் முதலீடு செய்ய வேண்டும். அதிக பட்சமாக 60% தொகையை மொத்தமாக எடுத்துக்கொள்ளலாம். 60% தொகையை சந்தாதாரரின் 60 வயதிலிருந்து 63 வயது வரை உட்பட்ட காலத்தில் எடுத்துக்கொள்ளலாம். சந்தாதாரர் 60 வயது அடைந்தவுடன் அவரது கணக்கில் ₹2,00,000/– மற்றும் அதற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் கணக்கிலுள்ள முழுத்தொகையையும் எடுத்துக்கொண்டு கணக்கை முடித்துக்கொள்ளலாம்.

### இறப்பு நிகழும் பட்சத்தில்:-

சந்தாதாரருக்கு மரணம் நிகழும் பட்சத்தில் நியமனதாரர் 100% தொகையையும் மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம். நியமனதாரர் விரும்பினால் அந்த தொகையை தன்னுடைய பெயரில் NPS கணக்கு துவங்கி அந்த கணக்குடன் இணைத்துக்கொள்ளலாம்.

### திட்ட விபரம்

| | |
|---|---|
| வயது வரம்பு | 18–60 |
| கணக்கு துவங்க குறைந்தபட்ச பங்களிப்பு | ரூ.500/– |
| நிதியாண்டில் குறைந்தபட்ச பங்களிப்பு | ரூ.6000/– |

### முதலீட்டு பிரிவுகள்

நீங்கள் செலுத்தும் ஒவ்வொரு பங்களிப்பும் கீழ்கண்ட E, C, G என்ற பிரிவின் கீழ் முதலீடு செய்யப்படுகிறது.

**முதலீட்டு பிரிவு E :-** இது முழுக்க பங்கு சந்தை சார்ந்த முதலீடு. இந்த பிரிவின் கீழ் அதிக பட்சம் 50% வரை தமது முதலீட்டுத் தொகையினை பங்கு சந்தையில் முதலீடு செய்ய முடியும்*.

**முதலீட்டு பிரிவு C :-** அரசுத்துறை சாராத நிறுவனங்களின் கடன் பத்திரங்கள் மற்றும் பாண்டுகளில் முதலீடு செய்யப்படும்*.

**முதலீட்டு பிரிவு G :-** இது முழுக்க மத்திய, மாநில அரசுகளின் கடன் பத்திரங்கள் மற்றும் பாண்டுகளில் முதலீடு செய்யப்படும்*.

*மேற்சொன்ன முதலீட்டு பிரிவுகளின் மூலம் கிடைக்கும் தொகை அன்றைய தேதியின் சந்தை நிலவரத்திற்கு உட்பட்டது.

உங்கள் முதலீட்டை நீங்கள் முற்றிலும் C or G–ல் முதலீடு செய்யலாம். ஆனால் பங்குச்சந்தையில் (E) அதிகபட்சமாக 50% வரை மட்டுமே முதலீடு செய்ய முடியும். மேலும் உங்கள் முதலீட்டை ஆரம்பத்திலேயே, E,C,G என மூவற்றிலும் தங்கள் விருப்பப்படி பிரித்து முதலீடு செய்து கொள்ளலாம். PFRDA நியமனம் செய்துள்ள முதலீட்டை நிர்வகிக்கும் நிறுவனங்களை சந்தாதாரரின் விருப்பப்படி அவரே தேர்வு செய்ய முடியும்.

## சந்தாவை முதலீடு செய்ய இரு வழிகள்:-

- ⇨ **ஆக்டிவ் சாய்ஸ் –** சந்தாதாரர் தன்னுடைய முதலீட்டை எவ்வளவு சதவீதம் E,C,G- ல் முதலீடு செய்ய வேண்டும் என்பதை அவரே முடிவு செய்யலாம்.
- ⇨ **ஆட்டோ சாய்ஸ் –** முதலீட்டை நிர்ணயம் செய்யத் தெரியாதவர்களுக்கு வயது அடிப்படையில் ரிஸ்க் எடுக்கும் தன்மையைப் பொறுத்து முதலீட்டு சதவீதத்தை முதலீட்டை நிர்வகிக்கும் நிறுவனங்களே நிர்ணயித்துக்கொள்ளும். வயது அடிப்படையில் முதலீட்டு திட்டத்துக்கான வரைமுறையை அரசே வரையறுத்துள்ளது.

  மத்திய அரசின் இந்த திட்டம் ஓய்வு கால பணத் தேவையை கருத்தில் கொண்டு தமது வாழ்நாள் கால வருமானத்திலிருந்து பிறரை எதிர்பாராமல் தமக்குத்தாமே சேமித்து ஓய்வூதியம் பெறும் இத்திட்டம் ஒரு சிறந்த திட்டம் என்பதில் சந்தேகமில்லை.

## ஓய்வூதிய சேமிப்பு விபரம்

60 வயதில் ரூ.1000
மாதாந்திர சேமிப்பின் முதிர்வு தொகை.

Pension Corpus

| Age | 6% | 8% | 10% | 12% |
|---|---|---|---|---|
| 18 | 2,270,160 | 4,120,494 | 7,744,296 | 14,965,113 |
| 19 | 2,126,657 | 3,793,210 | 6,998,859 | 13,269,523 |
| 20 | 1,991,491 | 3,491,008 | 6,324,080 | 11,764,773 |
| 21 | 1,864,177 | 3,221,966 | 5,713,261 | 10,429,383 |
| 22 | 1,744,259 | 2,954,310 | 5,160,340 | 9,244,293 |
| 23 | 1,631,308 | 2,716,400 | 4,659,830 | 8,192,586 |
| 24 | 1,524,919 | 2,496,724 | 4,206,761 | 7,259,249 |
| 25 | 1,424,710 | 2,293,882 | 3,796,638 | 6,430,959 |
| 26 | 1,330,323 | 2,106,587 | 3,425,389 | 5,695,895 |
| 27 | 1,241,420 | 1,933,645 | 3,089,331 | 5,043,562 |
| 28 | 1,157,681 | 1,773,958 | 2,785,126 | 4,464,651 |
| 29 | 1,078,807 | 1,626,508 | 2,509,756 | 3,950,896 |
| 30 | 1,004,515 | 1,490,359 | 2,260,488 | 3,494,964 |
| 31 | 934,539 | 1,364,645 | 2,034,847 | 3,090,348 |
| 32 | 868, 628 | 1,248,565 | 1,830,595 | 2,731,272 |
| 33 | 806,547 | 1,141,381 | 1,645,702 | 2,412,610 |
| 34 | 748,072 | 1,042,411 | 1,478,336 | 2,129,814 |
| 35 | 692,994 | 951,026 | 1,326,833 | 1,878,847 |
| 36 | 641,116 | 866,645 | 1,189,692 | 1,656,126 |
| 37 | 592,251 | 788,731 | 1,065,549 | 1,458,473 |
| 38 | 546,226 | 716,788 | 953,174 | 1,283,065 |
| 39 | 502,874 | 650,359 | 851,450 | 1,127,400 |
| 40 | 462,041 | 589,020 | 759,369 | 989,255 |
| 41 | 423,580 | 532,383 | 676,016 | 866,659 |
| 42 | 387,353 | 480,086 | 600,563 | 757,861 |
| 43 | 353,231 | 431,797 | 532,263 | 661,308 |
| 44 | 321,091 | 387,209 | 470,436 | 575,622 |
| 45 | 290,819 | 346,038 | 414,470 | 499,580 |
| 46 | 262,305 | 308,023 | 363,809 | 432,097 |
| 47 | 235,447 | 272,920 | 317,950 | 372,209 |
| 48 | 210,150 | 240,508 | 276,438 | 319,062 |
| 49 | 186,323 | 210,580 | 238,860 | 271,896 |
| 50 | 163,879 | 182,946 | 204,845 | 230,039 |
| 51 | 142,740 | 157,430 | 174,054 | 192,893 |
| 52 | 122,829 | 133,869 | 146,181 | 159,927 |
| 53 | 104,074 | 112,113 | 120,950 | 130,672 |
| 54 | 86,409 | 92,025 | 98,111 | 104,710 |
| 55 | 69,770 | 73,477 | 77,437 | 81,670 |

மேலே கண்ட ஓய்வூதிய சேமிப்பு தொகையானது ரூ.1000/-வீதம் மாதாந்திர தவணையை அடிப்படையாக கொண்டு 60 வயது முடிவில் காணும் முதிர்வு தொகையே. மாத தவணை ரூ.2000/- என்று எடுத்துக்கொண்டால், இந்த தொகையை அப்படியே இரட்டிப்பு செய்து கணக்கிட்டுக் கொள்ளலாம். மாதாந்திர ஓய்வூதியம் மேலே உள்ள அட்டவணையில் காணும் தொகையினைப் பொறுத்து 60 வயதிற்கு மேல் வழங்கப்படும்.

## தேசிய ஓய்வூதிய திட்டம் (NPS)

ஓய்வூதிய சேமிப்பின் அடிப்படையிலான
மாதாந்திர ஓய்வூதிய அட்டவணை

Monthly Pension

| Age | 6% | 8% | 10% | 12% |
|---|---|---|---|---|
| 18 | 13,451 | 24,414 | 45,885 | 88,668 |
| 19 | 12,600 | 22,475 | 41,468 | 78,622 |
| 20 | 11,800 | 20,684 | 37,470 | 69,706 |
| 21 | 11,045 | 19,031 | 33,851 | 61,794 |
| 22 | 10,335 | 17,504 | 30,575 | 54,772 |
| 23 | 9,666 | 16,095 | 27,609 | 48,541 |
| 24 | 9,035 | 14,793 | 24,925 | 43,011 |
| 25 | 8,441 | 13,591 | 22,495 | 38,103 |
| 26 | 7,882 | 12,482 | 20,295 | 33,748 |
| 27 | 7,355 | 11,457 | 18,304 | 29,883 |
| 28 | 6,859 | 10,511 | 16,502 | 26,453 |
| 29 | 6,392 | 9,637 | 14,870 | 23,409 |
| 30 | 5,952 | 8,830 | 13,393 | 20,708 |
| 31 | 5,537 | 8,086 | 12,056 | 18,310 |
| 32 | 5,147 | 7,398 | 10,846 | 16,183 |
| 33 | 4,779 | 6,763 | 9,751 | 14,295 |
| 34 | 4,432 | 6,176 | 8,759 | 12,619 |
| 35 | 4,106 | 5,635 | 7,861 | 11,132 |
| 36 | 3,799 | 5,135 | 7,049 | 9,813 |
| 37 | 3,509 | 4,673 | 6,313 | 8,641 |
| 38 | 3,236 | 4,247 | 5,648 | 7,602 |
| 39 | 2,980 | 3,853 | 5,045 | 6,680 |
| 40 | 2,738 | 3,490 | 4,499 | 5,861 |
| 41 | 2,510 | 3,154 | 4,005 | 5,135 |
| 42 | 2,295 | 2,845 | 3,558 | 4,490 |
| 43 | 2,093 | 2,558 | 3,154 | 3,918 |
| 44 | 1,902 | 2,294 | 2,787 | 3,411 |
| 45 | 1,723 | 2,050 | 2,456 | 2,960 |
| 46 | 1,554 | 1,825 | 2,156 | 2,560 |
| 47 | 1,395 | 1,617 | 1,884 | 2,205 |
| 48 | 1,245 | 1,425 | 1,638 | 1,890 |
| 49 | 1,104 | 1,248 | 1,415 | 1,611 |
| 50 | 971 | 1,084 | 1,214 | 1,363 |
| 51 | 846 | 933 | 1,031 | 1,143 |
| 52 | 728 | 793 | 866 | 948 |
| 53 | 617 | 664 | 717 | 774 |
| 54 | 512 | 545 | 581 | 620 |
| 55 | 413 | 435 | 459 | 484 |

மேலே கண்ட அட்டவணை ஒரு உதாரணத்திற்காக ரூ.100000/-க்கு வருடாந்திர வருமானம் ரூ.7110/-ன் அடிப்படையில் முதலீட்டு தொகையையும் வாழ்நாள் காலத்திற்கு பிறகு திரும்ப பெறும் வகையில் தயாரித்த அட்டவணை. எல்லா தொகைகளும் ஒரு வழிகாட்டுதலுக்காகவே தரப்பட்டுள்ளது. NPS இதர செலவினங்கள், கட்டணங்கள் தனி.

TMB Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead of life

pfrda Pension Fund Regulatory and Development Authority

# தேசிய ஓய்வூதிய திட்டம்

# NPS

### ஒவ்வொருவரின் உயிர்நாடி

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிட். NPS கணக்கு துவங்க மற்றும் அதன் சேவை உள்ளிட்ட பணிகளுக்கு PFRDA ஆல் அங்கீகரிக்கப்பட்ட வங்கி

TMB Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead of life

Assistant General Manager
Bancassurance Cell
196A&B, Ettayapuram Road
Thoothukudi - 628 002
Ph :+91 95241 47264/ 0461-2337800
Email : insurance@tmbank.in
Toll Free:180 0425 0426
Visit us at: www.tmb.in